செய்தி வெளியீடு எண் : 947 நாள்: 11.06.2022

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொளத்தூர், ஜமாலியா லேன் திட்டப்பகுதியில், ரூ.17.63 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 130 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டி, மறுகுடியமர்வு செய்யவுள்ள 128 குடியிருப்புதாரர்களுக்கு ரூ.20.48 இலட்சம் கருணைத் தொகை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (11.6.2022) சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜமாலியா லேன் திட்டப்பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.17.63 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 130 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், மறுகுடியமர்வு செய்யவுள்ள 128 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக தலா ரூ.16,000 வீதம், மொத்தம் 20.48 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

கொளத்தூர், ஜமாலியா லேன் பகுதியில் 1976–ஆம் ஆண்டில் 326 சதுர அடியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்ட 128 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி ரூ.17.63 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் கூடிய 130 புதிய குடியிருப்புகள் கட்டப்படவுள்ளது.

மேலும், ஒவ்வொரு குடியிருப்புகளும் பல்நோக்கு அறை, உறங்கும் அறை, சமையலறை, தனித்தனியே குளியலறை மற்றும் கழிப்பறை ஆகிய வசதிகளுடன் 413 சதுர அடியில் அமைய உள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சார வசதி, குடிநீர் வசதியும், ஒவ்வொரு பிளாக்கிலும் மின் தூக்கி (Lift) மற்றும் மின்னாக்கி (Generator) வசதிகள், மழைநீர் கால்வாய்கள் மற்றும் கான்கிரிட் சாலைகள், தெரு விளக்குகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது.

இங்கு கட்டப்படும் குடியிருப்புகள் ஏற்கனவே இருந்த 128 குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள 2 குடியிருப்புகள், அங்கன்வாடி மையத்திற்கு (ICDS) வழங்கப்படும். ஒரு குடியிருப்பிற்கான கட்டுமான தொகை ரூ.13.56 இலட்சம் ஆகும். இக்குடியிருப்புக்கு மாநில

அரசு மானியம் ரூ.10.56 இலட்சம், ஒன்றிய அரசு மானியம் ரூ.1.50 லட்சம் ஏற்கனவே இங்கு வசிக்கும் மறுகட்டுமான பயனாளிகளுக்கான பங்களிப்பு தொகை ரூ.1.36 இலட்சம் என நிர்ணயித்து அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் மறுகுடியமர்வு செய்யவுள்ள குடியிருப்புதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையினை 8,000 ரூபாயிலிருந்து 24,000 ரூபாயாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்.

அதன்படி, ஜமாலியா லேன் திட்டப்பகுதியில் மறுகுடியமர்வு செய்யவுள்ள 128 குடியிருப்புதாரர்களுக்கு ஏற்கனவே தலா ரூ.8000 கருணைத் தொகை வழங்கப்பட்ட நிலையில், மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூ.16,000 வீதம், மொத்தம் 20.48 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று குடியிருப்புதாரர்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in